குமரி மாவட்டத்தில் புதிதாகத் தொழில் தொடங்க முனைவோருக்கான வசதிகள்.

*(133—வினா 16871)—திரு. டி. மணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆறு ஆண்டுகளாக குமரி மாவட்டத்தில் புதிதாகத் தொழில் தொடங்க முன்வருபவருக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட நிலமோ, தொழிற்பேட்டைகளோ வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாகத் தொழில் தொடங்க முன்வருவோருக்கு அந்த வசதிகள் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், கோணம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் அரசு தொழிற்பேட்டைகள் அமைந்துள்ளன. கோணம் தொழிற்பேட்டையில் இதுவரை 19 மேம்படுத்தப்பட்ட மனைகளும், 8 தொழிற்கூடங்களும் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 5 மேம்படுத்தப்பட்ட மனைகள் காலியாக உள்ளன. மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் 5 தொழிற்கூடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டையில் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்குத் தேவை ஏற்படவில்லை.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் முனைவோர்கள் மேலும் தொழிற்கூடங்கள் தேவை என முன் வந்தால் புதிய தொழிற்பேட்டையினை நிறுவுவது குறித்து ' சிட்கோ ' பரிசீலனை செய்யும்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மார்த்தாண்டம் தொழிற் பேட்டையில் ஏற்கனவே பலர் விண்ணப்பித்தும், அவர்களுக்குத் தொழில் துவங்குவதற்கான அனுமதி வழங்கவில்லை என்றும், அதற்குப் பதிலாக அந்தத் தொழிற் பேட்டையில் உணவு வினியோகத் துறையின் மூலமாக வினியோகம் செய்யப்படுகின்ற அரிசி கொடவுனை அமைத்திருக்கிறார்கள் என்றும் அதன் காரணமாகவே அங்கே தொழிற்பேட்டை உருவாவதற்கு அனுமதி வழங்கப் படவில்லை என்றும் புகார் வந்துள்ளது. எனவே அந்த அரிசி கொடவுனை அங்கேயிருந்து மாற்றி, காயர் போர்டு மூலமாக, தேங்காய்மட்டை நாரையும், ரப்பரையும் பயன் படுத்தி, மெத்தைகள் தயாரிக்கின்ற ஒரு யூனிட்டைத் துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டத்தில் உள்ள தொழிற்பேட்டையின் நிலங்களில், பயன்படுத்தப்படாத 5 ஏக்கர் நிலம், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்குத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மார்த்தாண்டத்தில் உள்ள தொழிற்பேட்டையில் உள்ள, 5 வாடகை தவணை முறை தொழிற்கூடங்கள் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது எந்தக் கூடமும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அரசு ஆணை எண். 383, தேதி 19-3-1982-ன்படி 5 வாடகை முறை தொழிற் கூடங்கள், தவணை முறை தொழிற் கூடங்களாக மாற்றம் செய்யப்பட்டு அதற்கான ஒதுக்கீடு கருவிகள், தொழில் முனைவோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(முற்பகல் 10–10)

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே தொழிற்பேட்டையை அங்கு தொடங்குவதற்குப் பதில் அரிசி கொடவுன் வைப்பதற்கு அதை வழங்கியிருப்பது சரியல்ல. அதை நிறுத்துவதற்கு அரசு முன்வருமா ? என்பது இன்னொன்று, நரசிங்கராஜபுரத்திலே 1982 இல் காயர் போர்டு மூலமாக காயர் உற்பத்தி செய்து பாய்களும் தடுக்குகளும் தயாரிப்பதற்கு ஒரு யூனிட் ஆரம்பிப்பதற்கு அரசாலே பரிசீலிக்கப்பட்டு 1983 இல் ஆரம்பிக்க முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இதுவரைக்கும் அது ஆரம்பிக்கப்படவில்லை. அந்த வேலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, காயர் யூனிட் ஏற்படுத்துவது பற்றிய குறிப்பு தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணவுப் பொருள் வழங்கு துறைக்கு வழங்கிய நிலத்தைப் பற்றி கூறிய அந்த ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காயர் போர்டு கொல்லன்கோடு என்ற கிராமத்தை மாதிரி கிராமமாக தேர்ந்து எடுத்து இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்த மாதிரி கிராமத்தில் என்ன என்ன தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, புதிதாகத் தொழில்கள் தொடங்குவதற்கு இடம் மற்றும் மற்றத் தேவையான வசதிகளை செய்து கொடுக்கின்ற முறையிலே நாகர் கோவிலில் கோணம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களிலே இடம் கேட்டு மனுச் செய்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? உதவி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? புதிதாகத் தொழில் துவங்க அரசு செய்திருக்கிற அறிவிப்பின்படி தொழில் துறையிலே பின் தங்கிய தாலுகாவாக தோவாளை தாலுகாவை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தோவாளை தாலுக்காவிலே தொழில்கள் ஆரம்பிப்பதற்காக அதிகாரிகள் எல்லாம் வந்து பார்வையிட்டார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தொழில் செய்வதற்கு எந்தவிதமான இடமும் தற்போது இல்லை. கோணம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் அங்கே இருக்கின்ற தொழில் பேட்டையைப் போல் மீண்டும் ஒரு தொழிற் பேட்டையை துவங்க யாரேனும் முன்வந்தால் அவர்களுக்கு அரசு நிச்சயமாக உதவி செய்யும்.

கோவையில் இயங்கிடும் தமிழ்நாடு பால்பண்ணைக் கருவிகள் கூட்டுறவுத் தொழிலியல் சங்கம்.

(*134—வினா 18510)—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவையில் இயங்கும் தமிழ்நாடு பால் பண்ணைக் கருவிகள் கூட்டுறவு தொழிலியல் சங்கம் தற்போது எந்த நிலையில் இயங்கி வருகிறது?

(ஆ) அதன் 1981—82 ஆம் வருடத்திய இலாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) நட்டத்தி இயங்கிக் கொண்டு வருகிறது.

(ஆ) நட்டத்தில் இயங்கியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்க , —விடைகள் முடிவுற்றன.